


மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (05.12.2024) சென்னை, எழும்பூர், நல்வாழ்வு மற்றும் குடும்ப நல மையத்தில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில் உலக எய்ட்ஸ் தினம் 2024 அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் எச்ஐவி/எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு பதாகையினை வெளியிட்டார்கள். இந்நிகழ்வில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குநர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கூடுதல் இயக்குநர் மரு.சேரன் மற்றும் மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை தென்மேற்கு மாவட்ட கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# முரசொலி செல்வம் - கவிஞர் தணிகைச்செல்வன் நினைவேந்தல் - படத்திறப்பு!

### ச.சண்முகநாதன் தலைமை! த.வேலு எம்.எல்.ஏ., இறையன்பன் குத்தூஸ் பங்கேற்பு!



சென்னை, டிச. 6 -

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் முரசொலி செல்வம் மற்றும் கவிஞர் தணிகைச் செல்வன் நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்ச்சி 8.12.2024 ஞாயிறு மாலை 6.30 மணிக்கு, தியாகராயர்நகர், முத்துரங்கம் சாலை, முதல்வர் மு.க.ஸ்டாலின் மினி ஹாலில் நடைபெறுகிறது.

இந்நிகழச்சிக்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., முனைவர் இறையன்பன் குத்தூஸ், ஜெ.கருணாநிதி எம்எல்ஏ., பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை, எஸ்.மோகன், நந்தனம் கி.மதி, மயிலை எஸ்.முரளி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.கா.இளங்கோவன், ஆர்.கே. சிவகுமார், கோயில் தி.ரமேஷ், துணை ஆனந்தராஜ், எம்.வெற்றிவேல் ஆகியோர் வரவேற்கின்றனர். ச.சண்முகநாதன் தலைமை தாங்குகிறார்.

கவிஞர் கலி. பூங்குன்றன், சிகரம் செந்தில்நாதன், கவிஞர் காசி முத்துமாணிக்கம், இயக்குர் அஜயன் பாலா ஆகியோர் அன்னாரது படங்களை திறந்து வைத்து, புகழுரைக்கின்றனர்.

ஜி.எம்.செல்வராஜ், ஆ. தேவேந்திரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### உயர் கல்விக்கான அரசின் செலவுகள் விகிதத்தை

# மேம்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதா?

### மாநிலங்களவையில் கிரிராஜன் கேள்வி!



சென்னை, டிச. 6-

கல்வி முறையை வலுப்படுத்துவதையும், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாக கொண்டு நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக, திமுக எம்.பி. ஆர். கிரிராஜனின் கேள்விகளுக்கு ஒன்றிய கல்வித் துறை இணை அமைச்சர் சுகந்தா மஜூம்தார் பதிலளித்துள்ளார்.

உயர் கல்விக்கான அரசின் செலவுகள், மொத்த பதிவு விகிதத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், நிதி ஒதுக்கீடு குறித்து மாநிலங்களவையில் திமுக எம்.பி. கிரிராஜன் கேள்விகளை எழுப்பி இருந்தார்.

அதற்கு மத்திய இணை அமைச்சர் அளித்துள்ள பதிலில், கடந்த 5 ஆண்டுகளில் உயர் கல்விக்கான முதலீடு தொடர்ந்து உயர்ந்து வருவதாகவும், 2016-17ஆம் நிதியாண்டில் 2.21 லட்சம் கோடி ரூபாயிலிருந்து 2020-21ல் 3.11 லட்சம் கோடி ரூபாயாக செலவினங்கள் அதிகரித்துள்ளதாகவும், இது ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த செலவினம் மற்றும் தரத்தை மேம்படுத்துவதை வெளிப்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும் போது கல்விக்கான மத்திய செலவினத்தின் சதவீதம் 1.13% என்ற அளவிலேயே இருப்பதையும் பதிலில்குறிப்பிட்டுள்ளார்.

மாணவர் பதிவு மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிகள் குறித்த கேள்விக்கு அளித்துள்ள பதிலில், உயர்கல்வி நிறுவனங்களை பொறுத்தவரை 2014-15ல் 760 ஆக இருந்த பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 2022-23ல் ஆயிரத்து 213 ஆக உயர்ந்ததுள்ளதாகவும், கல்லூரிகளின் எண்ணிக்கை 38498லிருந்து 46,624 ஆக உயர்ந்துள்ளதாகவும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

எஸ்.சி., எஸ்.டி., ஓபிசி, சிறுபான்மையினர் உள்ளிட்ட மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளாதாகவும், இயல்பான கற்றல் விருப்பத்தை கருத்தில்கொண்டு ஸ்வயம் உள்ளிட்ட ஆன்லைன் மற்றும் தொலைதூர கல்வி திட்டங்களை மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

பல்வேறு துறைகளிலும் கல்வியின் கட்டமைப்பை கருத்தில் கொண்டும், கிராமப்புற மாணவர்களை கருத்தில்கொண்டும் 13 மொழிகளில் JEE, NEET, CUET ஆகிய நுழிவுத் தேர்வுகள் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் காரணமாக மொத்த பதிவு விகிதமான GER என்பது 2014-15ல் 23.7%-லிருந்து 2022-23-ல் 29.5%ஆக உயர்ந்துள்ளது என்றும், Ph.D. படிப்புல் 2014-15ல் 1.17 லட்சமாக இருந்த பதிவுகள் 2022-23ல் 2.33 லட்சமாக அதிகரித்துள்ளது என்றும் இணை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், UGC பெரிய ஆராய்ச்சி திட்டங்களுக்கு 675.69 லட்சம் ஒதுக்கப்பட்டதாகவும், சிறு ஆராய்ச்சி திட்டங்களுக்கு 273.25 லட்சம் ஒதுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ள இணை அமைச்சர் சுகந்தா மஜூம்தார், ராஷ்ட்ரிய உச்சதர் ஷிக்ஷா அபியான் (RUSA), சமூக அறிவியலில் தாக்கக் கொள்கை ஆராய்ச்சி (IMPRESS), தாக்கத்தை ஏற்படுத்தும் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்பம் (IMPRINT) போன்ற திட்டங்களுக்கு அரசாங்கம் ஆதரவளித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி அமைச்சகத்தின் பட்ஜெட் ஒதுக்கீடு 2021-22ல் 93,000 கோடியிலிருந்து 2024-25ல் ஒரு லட்சத்து 21 ஆயிரம் கோடியாக உயர்த்தியதன் மூலம் கல்வி முறையை வலுப்படுத்துவதையும், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்பபட்டுள்ளது



பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் பகுதி கழக செயலாளர், மண்டல குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்ப்பாட்டில் நாகல்கேணியில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரையாற்றி 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் இ.கருணாநிதி எம்.எல். ஏ, எஸ்.ஆர்.ராஜா எம். எல்.ஏ,துணை மேயர் கோ.காமராஜ்,இளம் பேச்சாளர்கள் மறைமலை நகர் ரிஷி சந்தோஷ்,பம்மல் வீ.தினேஷ்,ரத்னா லோகேஸ்வரன், பேராசிரியர் எல்.பிரபு, எஸ்.கே. நெப்போலியன், வி.ரவிச்சந்திரன், பி.கே.அ.சத்திய பிரபு,தொழிலதிபர் பம்மல் மு.ஏஇப்ராஹிம், ப.காளேஸ்வரன்,பொருளாளர் ஆர்.உமாசங்கர், துரை இளங்கோவன்,பா.கவிதா, பா.டில்லி, பி.ஜே.வேந்தன்,என்.கே.ரவிச்சந்தின், இரா.கந்தவேலு,ரா.கோகுல்,சு.மனோகரன், வட்ட கழக செயலாளர்கள் மா.சாலா(ஏ) சுகுமாரன்,ஏ.அனிஸ்டன், வி.எஸ்.ஜெகநாதன்,மு.இன்பசேகர்,என்.காந்தி, எச்.முகமது அப்பாஸ்,பி.ஸ்ரீதர்,மாமன்ற உறுப்பினர்கள் ஆ. மதினாபேகம்,கல்யாணி டில்லி,ரம்யா சத்தியபிரபு,சத்யா மதியழகன் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர். என். பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் ஆதீன பெருமக்கள் நேற்று (05.12.2024) மயிலாடுதுறை மாவட்டம், திருக்கடையூர், அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலில் ரூ.3 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள புதிய வெள்ளிரத வெள்ளோட்டத்தினை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் தருமபுர ஆதீனம் தவத்திரு மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், மதுரை ஆதீனம் தவத்திரு ஹரிஹர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் தவத்திரு சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள், தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு திருச்சிற்றம்பல தேசிக ஞானபிரகாச பரமாசாரிய சுவாமிகள், திண்டுக்கல் சிவபுர ஆதீனம் தவத்திரு திருநாவுக்கரசு தேசிக பரமாசாரிய சுவாமிகள், இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி ஆர்.சுதா, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் எம்.நிவேதா முருகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ந.உமாமகேஸ்வரி, உயதாரர் கே.எஸ்.ஜெயராமன், மண்டல இணை ஆணையர் ச.சிவக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருக்கடையூர், அமிர்தகடேசுவரர் திருக்கோயில் புதிய வெள்ளித்தேர் வெள்ளோட்டம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் ஆதீன பெருமக்கள் தொடங்கி வைத்தனர்!

சென்னை, டிச. 6-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் ஆதீன பெருமக்கள் நேற்று (05.12.2024) மயிலாடுதுறை மாவட்டம், திருக்கடையூர், அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலில் ரூ.3 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள புதிய வெள்ளிரத வெள்ளோட்டத்தினை தொடங்கி வைத்தனர்.

மயிலாடுதுறை மாவட்டம், திருக்கடையூர், அபிராமி அம்மாள் உடனாகிய அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலானது, பக்த மார்க்கண்டேயருக்காக எமனை வதம் செய்து மார்க்கண்டேயருக்கு “என்றும் சிரஞ்சீவியாக வாழும் வரம்” அருளியதும் அபிராமி பட்டருக்காக அமாவாசையை பௌர்ணமி ஆக்கியதுமான சிறப்புகளை கொண்ட திருத்தலமாகும். சமய குரவர்களில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோராலும் அபிராமி பட்டராலும் பாடல் பெற்ற அட்டவீரட்டத் தலங்களில் ஒன்றாகும்.

இத்திருக்கோயிலுக்கு ரூ.3 கோடி செலவில் 250 கிலோ வெள்ளியை கொண்டு உபயதாரர் கே.எஸ்.ஜெயராமன் அவர்களால் புதிய வெள்ளித்தேர் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. நேற்று நடைபெற்ற புதிய வெள்ளித்தேரின் வெள்ளோட்ட நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஆதீன பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில்,

திருக்கடையூர், அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலின் புதிய வெள்ளித்தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சியில் பங்கேற்றதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி அமைந்த பிறகு தருமபுரம் ஆதீனத்திற்குட்பட்ட 26 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. மாநில வல்லுநர் குழுவால் 10,799 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் குடமுழுக்கு நடைபெறும் 24 திருக்கோயில்களையும் சேர்த்து இதுவரை 2,342 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. அதனால் இந்த ஆட்சியை ஆன்மிக ஆட்சி என்று சொல்லாமல் வேறு எந்த ஆட்சி என்று சொல்ல முடியும். திருக்கோயில்களில் உள்ள 70 தங்க தேர்களும், 58 வெள்ளி தேர்களும் முழுமையாக பழுது நீக்கப்பட்டு பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்திடும் வகையில் பயன்பாட்டில் உள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றபின் ரூ.31 கோடி மதிப்பீட்டில் 5 புதிய தங்கத்தேர்கள் மற்றும் ரூ.29.77 கோடி மதிப்பீட்டில் 9 புதிய வெள்ளித்தேர்கள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதில் ரூ. 8 கோடி செலவில் பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலுக்கு புதிள தங்கத்தேர் மற்றும் ரூ. 4 கோடி செலவில் திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு புதிய வெள்ளித்தேர் பணிகள் நிறைவுற்று பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்திடும் வகையில் உலா வருகிறது. அதேபோல பலநூறு கோடி மதிப்பீட்டில் புதிய மரத்தேர்களும், மரத்தேர் மராமத்து பணிகளும், திருத்தேர்களை பாதுகாத்திடும் வகையில் பாதுகாப்பு கொட்டகைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

தருமபுரம் ஆதீனம் அவர்கள் எங்களுக்கு பல நல்ல ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்கள். ஆதீனங்களின் மனம் சிறுதும் கோணாமல் நிச்சய மாக இந்து சமய அறநிலையத் துறை தொடர்ந்து பயணிக்கும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தருமபுர ஆதீனம் தவத்திரு மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், மதுரை ஆதீனம் தவத்திரு ஹரிஹர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் தவத்திரு சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள், தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு திருச்சிற்றம்பல தேசிக ஞானபிரகாச பரமாசாரிய சுவாமிகள், திண்டுக்கல் சிவபுர ஆதீனம் தவத்திரு திருநாவுக்கரசு தேசிக பரமாசாரிய சுவாமிகள், இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி ஆர்.சுதா, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் எம்.நிவேதா முருகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ந.உமாமகேஸ்வரி, உயதாரர் கே.எஸ்.ஜெயராமன், மண்டல இணை ஆணையர் ச.சிவக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

**கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது**

**இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 2680 / 2024**
**இரண்டு எண்ணிக்கையிலான டிராக்டர் மூலம் இயங்கும் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்யும் இயந்திரங்களை எலியட்ஸ் பீச்சின் கடற்கரை மணற்பரப்பினை சுத்தம் செய்ய ஆறு மாத காலத்திற்கு வாடகை முறையில் அமர்த்தும் பணி**

முன் வைப்புத் தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **11.12.2024 பிற்பகல் 3.00 மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் **12.12.2024 பிற்பகல் 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு : **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5325 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் (இ)**


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வி.எம். தண்டபாணி**
**டிசம்பர் 6 (2012)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தென்சென்னை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும், மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராகவும், மயிலைப் பகுதி துணைச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

முரசொலி நாளிதழின் செய்தியாளராகவும் – மருந்தீஸ்வரர் கோவில் அறங்காவலராகவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துத் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**